بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 25/10/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பனூ குறைஸா போர் பின்னனியில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அகழ்ப் போரின் போது பனூ குறைஸா உடன்படிக்கையை முறித்ததன் காரணமாக முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தினார்கள். ஆகவே உடன்படிக்கையை முறித்ததற்கான தண்டனையை வழங்கும் பொருட்டு அகழ்ப் போருக்குப் பிறகு அவர்களின் கோட்டைகளை முற்றுகையிட்டது தொடர்பாக (கடந்த குத்பாவில்) கூறப்பட்டது. இதன் மேற்கொண்டு விபரமாவது, முற்றுகை தீவிரமான போது பெருமானார் (ஸல்) அவர்களின் தீர்ப்புக்கிணங்க பனூ குறைஸா கோட்டைகளை விட்டு வெளியே வந்தார்கள்.

பனூ குறைஸா கோட்டைகளின் முற்றுகை எத்தனை நாட்களாக நடந்தன என்பதைப் பற்றி பல்வேறு அறிவிப்புகள் காணக் கிடைக்கின்றன. சில அறிவிப்புகளில் 10 நாட்கள் என்றும், சிலவற்றில் 15 நாட்கள் என்றும், சிலவற்றில் 14 நாட்கள் என்றும், சிலவற்றில் 20 நாட்கள் என்றும் கூறப்பட்டுள்ளன. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் பல்வேறு வரலாற்று நூல்களில் உள்ள அறிவிப்புகளை ஆராய்ந்த பிறகு இந்த முற்றுகைக்கான காலகட்டம் ஏறக்குறைய 20 நாட்கள் இருந்தது என்று கூறியுள்ளார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் நடுவராக நியமிக்கப்பட்டார்கள். அதன் விவரம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களைக் கைது செய்யுமாறு கட்டளையிட்டார்கள். ஆகவே அவர்கள் கயிறுகளில் பிணைக்கப்பட்டார்கள். பெண்களும் குழந்தைகளும் தனியாக பிரிக்கப்பட்டார்கள். யூதர்களின் கோட்டைகளிலிருந்து 1500 வாள்களும், 300 கவசங்களும், 2000 ஈட்டிகளும், 1500 தோல் கேடயங்களும், பல (வகையான) பாத்திரங்களும் கிடைத்தன. ஒட்டகங்களும், மற்ற கால்நடைகளும் இருந்தன. அவை அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டன. அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்த செல்வாக்குமிக்கவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பனூ குறைஸா எங்களுடைய நட்புக் கோத்திரம் ஆவார்கள். எங்களுக்காக அவர்களை மன்னித்து விடுங்கள் என்று வேண்டினார்கள். அவர்கள் வலியுறுத்தி கேட்டபோது அம்மக்களிடம், யூதர்களைக் குறித்து தீர்ப்பு வழங்கும் பொறுப்பு உங்களில் ஒருவரிடம் ஒப்படைக்கப்படுவதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் ஒப்புக் கொண்டபோது இந்த விவகாரத்தை ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களிடத்தில் ஒப்படைத்தார்கள்.

இன்னோர் அறிவிப்பில், என்னுடைய சஹாபிகளில் எவரை விரும்புகிறீர்களோ அவரைத் தீர்ப்புக்காக தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று அன்னார் கூறிய போது அம்மக்கள் ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் அவ்ஸ் கோத்திரத்தின்

தலைவராக இருந்தார்கள். மேலும் பனூ குறைஸாவின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவராகவும் இருந்தார்கள். இதன் காரணமாக இப்பொழுது விவகாரம் தமது கைகளில் உள்ளது; அரேபிய வழக்கத்திற்கேற்ப ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் தம் நட்புக் கோத்திரத்திற்கு சலுகை வழங்குவார்கள் என்று அவர்கள் கருதிக் கொண்டார்கள். ஆனால் ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் பரிசுத்தமான தூய உள்ளம் அனைத்து உறவுகளையும், தொடர்புகளையும் விட இறைவனுக்கும் அவனது தூதருக்கும் முன்னுரிமை கொடுத்திருந்தது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் இதைக் குறித்து இவ்வாறு எழுதுகிறார்கள்: அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்த சிலர் ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களிடம் மிகவும் வலியுறுத்தியவாறு பனூ குறைஸா நமது நட்புக் கோத்திரம் ஆகும். கஸ்ரஜ் கோத்திரம் தமது நட்புக் கோத்திரமான பனூ கைனுகாவுடன் மென்மையுடன் நடந்து கொண்டது போல் தாங்களும் பனூ குறைஸா உடன் சலுகை அளிக்கும் விதமாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுத்து விடக்கூடாது என்று கூறினார்கள். ஆரம்பத்தில் ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் அமைதியாக அவர்களின் பேச்சை கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அம்மக்களின் சார்பாக அதிகமாக வலியுறுத்தப்பட்டபோது, உண்மை மற்றும் நீதி விஷயத்தில் எவருடைய பழிப்பையும் நான் பொருட்படுத்த மாட்டேன் என்று கூறினார்கள். இந்த பதிலை கேட்டபோது மக்கள் மௌனமாகி விட்டார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் தாம் கூறப்போகும் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று இரு தரப்பினரிடமும் வாக்குறுதி மற்றும் உறுதிமொழி வாங்கி 'பனூ குறைஸாவின் கொலையாளிகள் அதாவது, போர் செய்தவர்கள் கொல்லப்பட வேண்டும் என்றும் அவர்களின் பெண்களும் பிள்ளைகளும் கைது செய்யப்பட வேண்டும் என்றும் அவர்களின் செல்வங்கள் முஸ்லிம்களிடத்தில் பங்கிட்டு கொடுக்கப்பட வேண்டும் என்றும் தம் தீர்ப்பை கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்தத் தீர்ப்பைக் கேட்ட போது,

لَقَدْ حَكَمْتَ بِحُكْمِ اللّٰهِ

உங்களுடைய இந்தத் தீர்ப்பு ஓர் இறை நியதி ஆகும் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதன் பொருள் என்னவென்றால், பனூ குறைஸாவைக் குறித்து கூறப்பட்ட இந்தத் தீர்ப்பில் இறை ஆதிக்கம் இருந்தது தெளிவாக தென்பட்டது. ஆகவே அன்னாருடைய கருணை உணர்வால் இதைத் தடுக்க இயலாது என்பதாகும்.

ஓர் அறிவிப்பில் வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் தீர்ப்பைக் குறித்து கூறும்போது இந்தத் தீர்ப்பைக் குறித்துதான் ஸஹ்ரீ நேரத்தில் வானவர் என்னிடம் கூறினார் என்றார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் தீர்ப்பு கூறிய பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் துல்ஹஜ் 9 ஆம் நாள் அன்று மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள். ஓர் அறிவிப்பில் துல்ஹஜ் 7 ஆம் நாள் வியாழக்கிழமை அன்று திரும்பி வந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

அன்னாருடைய கட்டளைக்கேற்ப அந்தக் கைதிகள் மதீனாவில் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்களின் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டார்கள். பெண்களும், பிள்ளைகளும் ஹஸ்ரத் ரம்லா பின்த் ஹாரிஸ் (ரலி) அவர்களின் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். சஹாபிகள் பனூ குறைஸா கைதிகளுக்காக குவியல் குவியலாக பேரீத்தம் பழங்களைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். அந்த யூதர்கள் இரவு முழுவதும் பழங்களை உண்பதில் மூழ்கி இருந்தார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் தீர்ப்பைப் பற்றி எடுத்துரைக்கும்போது பனூ குறைஸா மீது பெருமானார் (ஸல்) அவர்கள் அநீதி இழைத்தார்கள் என்று கூறி அந்நியர்களும், ஆட்சேபனை செய்யக் கூடியவர்களும் சில சமயத்தில் நம்முடைய இளைஞர்களிடத்திலும் விஷ சிந்தனையை தோன்றச் செய்கிறார்கள். அதற்கு இது மிகவும் தெளிவான பதிலாகும்; பெருமானார் (ஸல்) அவர்களோ எந்தத் தீர்ப்பும் கொடுக்கவில்லை. பனூ குறைஸா உடைய நட்புக் கோத்திரத்தின் மூலமாகத்தான் அல்லாஹ் தீர்ப்பு கொடுக்க வைத்தான். தீர்ப்பு கொடுத்தவரும் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து உறுதியான வாக்குறுதியை வாங்கிக் கொண்டார்.

அந்த சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் பெரும் வருத்தத்துடன்,

لَوْ آمَنَ بِي عَشَرَةٌ مِنَ الْيَهُودِ لَآمَنَتْ بِيَ الْيَهُودُ

என்று கூறினார்கள். அதாவது, யூதர்களில் 10 செல்வாக்குள்ள நபர்கள் என் மீது ஈமான் கொண்டிருந்தாலும் அந்த முழு சமுதாயமும் என்னை ஒப்புக்கொண்டு இறை தண்டனையிலிருந்து தப்பித்திருக்கும் என்று நான் இறைவனின் மீது நம்பிக்கை வைத்திருப்பேன் என்று கூறினார்கள்.

அடுத்த நாள் காலையில் ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் தீர்ப்பு அமல்படுத்தப்பட இருந்தது. தீர்ப்பை செயல்படுத்தும்போது பெருமானார் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலின் தேவை ஏற்பட்டால் தாமதிக்காமல் வழிகாட்டல் கொடுப்பதற்காக அன்னார் அருகிலேயே ஓரிடத்தில் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களுடைய தீர்ப்பின் மேல்முறையீடு நீதிமன்ற வழிமுறைப்படி அன்னாருக்கு முன்னால் எடுத்து வைக்கப்பட முடியாததுதான்! ஆனால் ஓர் அரசர் அல்லது ஒரு ஜனாதிபதி என்ற முறையில் ஒரு நபரைக் குறித்து குறிப்பிட்ட காரணத்தை அடிப்படையாக வைத்து கருணைக்கான மேல்முறையீடு வரும்போது அதை அன்னாரால் கண்டிப்பாக பரிசீலிக்க இயலும்.

அன்னாரிடம் காணப்பட்ட கருணை உணர்வு எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், குற்றவாளிகள் தனித்தனியாக கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டிருந்தார்கள். அதாவது ஒருவர் கொல்லப்படும்போது இன்னொரு குற்றவாளி அருகில் இருக்கக் கூடாது என்று கூறியிருந்தார்கள். ஆகவே ஒவ்வொரு குற்றவாளியும் தனித்தனியாக கொண்டு செல்லப்பட்டு ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் அவர்களுடைய தீர்ப்புக்கு இணங்க கொல்லப்பட்டார்.

பனூ நஸீர் கோத்திரத்தின் தலைவன் ஹுயய் பின் அக்தப் வந்த போது அவன் பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்து, முஹம்மதே!(ஸல்) உங்களை ஏன் எதிர்த்தேன் என்பதில் எனக்கு வருத்தம் இல்லை! ஆனால் விஷயம் என்னவென்றால், எவர் இறைவனை விட்டு விடுவாரோ அவரை இறைவனும் விட்டுவிடுவான். இது அவனுடைய கட்டளையும், அவனுடைய விதியும் ஆகும் என்று கூறினான். அதேபோன்று பனூ குறைஸா உடைய தலைவர் கஅப் பின் அசது கொல்லப்படுவதற்காக கொண்டு வரப்பட்ட போது பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிமாகிவிடுமாறு அவருக்கு சூசகமாக கூறினார்கள். அதற்கு அவர், அபூ காசிமே! நான் முஸ்லிமாகி இருப்பேன்தான்! ஆனால் மரணத்திற்கு அஞ்சி நான் முஸ்லிமாகி விட்டேன் என்று மக்கள் கூறுவார்கள். ஆகவே என்னை யூத மார்க்கத்திலேயே மரணிக்க விட்டு விடுங்கள் என்று கூறினார்.

இந்தப் போரில் கிடைத்த போர்ச் செல்வத்தையும் பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கிடையில் பங்கிட்டு கொடுத்தார்கள். சில பெண்களுக்கும் பங்கு கொடுக்கப்பட்டது.

கைதிகள் தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் பல்வேறு வரலாற்று நூல்களில் தாம் மேற்கொண்ட பெரும் ஆய்வை அடிப்படையாக வைத்து பின்வருமாறு எழுதுகிறார்கள்:

கைது செய்யப்பட்ட பெண்களைக் குறித்தும் குழந்தைகளைக் குறித்தும் சில அறிவிப்புகளில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களை நஜ்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள்; அங்கிருந்த சில நஜத் கோத்திரங்கள் ஃபித்யா செலுத்தி அவர்களை விடுவித்துக் கொண்டன. அந்தத் தொகையின் மூலமாக முஸ்லிம்கள் போருக்குத் தேவையான குதிரைகளையும் ஆயுதங்களையும் வாங்கிக் கொண்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு நிகழ்ந்திருக்கவும் வாய்ப்பு உள்ளது. ஏனென்றால் நஜதுடைய கோத்திரங்களுக்கும் பனூ குறைஸாவுக்கும் இடையில் நட்பு இருந்தது. ஆனால் சரியான அறிவிப்புகளில் இருந்து, அந்தக் கைதிகள் மதீனாவில்தான் இருந்தார்கள் என்று தெரியவருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் அக்கைதிகளை வழக்கம்போல் பல்வேறு சஹாபிகளின் கண்காணிப்பின் கீழ் பங்கிட்டு கொடுத்திருந்தார்கள். அந்தக் கைதிகளில் சிலர் தம்முடைய ஃபித்யாவை செலுத்தி விடுதலை வாங்கிக் கொண்டார்கள். சிலரை பெருமானார் (ஸல்) அவர்களே கருணையின் அடிப்படையில் விடுவித்து விட்டார்கள். இந்த மக்கள் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மனமுவந்து முஸ்லிம்களாக ஆகிவிட்டார்கள்.

அந்த சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்களுக்காக எப்படிப்பட்ட ஒரு கட்டளையைப் பிறப்பித்தார்கள் என்றால் அது அன்னாருடைய பரந்த கருணையையும், பெண்களுக்காக அன்னார் கொண்டிருந்த கருணையையும் எடுத்துக் காட்டுவதோடு பொன்னெழுத்துகளால் எழுதுவதற்குத் தகுதி படைத்ததாக இருக்கிறது. ‘எந்த பெண் பங்கிட்டு கொடுக்கப்பட்டாலும் சரி! அல்லது விற்கப்பட்டாலும் சரி! அந்தப் பெண்ணுடன் சிறு வயது ஆண் குழந்தையோ அல்லது சிறு வயது பெண் குழந்தையோ இருக்கும் என்றால் அக்குழந்தை பருவ வயதை அடையும் வரை அக்குழந்தையைத் தாயை விட்டுத் தனியாகப் பிரிக்கக் கூடாது. அதேபோன்று சிறு வயதுடைய இரு சகோதரிகள் இருப்பார்கள் என்றால் அவர்கள் பருவ வயதை அடையும் வரை அவர்களையும் பிரிக்கக் கூடாது என்று அன்னார் கூறினார்கள். இதுதான் அகில உலகங்களுக்கும் அருட்கொடையாக திகழ்ந்த அன்னாருடைய செயலாகும். இதுதான் அன்னார் பெண்கள் மீதும், கைதிகள் மீதும் தம் எதிராளிகள் மீதும் காட்டிய கருணை ஆகும். ஆனால் தற்போது முஸ்லிம்களுடைய நிலை எவ்வாறு உள்ளது என்று பாருங்கள்! அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் பெயரால் மக்களை வீடுகளை விட்டு வெளியேற்றுகிறார்கள்; வீடற்றவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். கொலை செய்கிறார்கள். பிறகு இதன் விளைவு எப்படி வெளிப்படுகிறது என்றால் முஸ்லிம்களின் கண்ணியம் குறைந்து கொண்டே செல்கிறது. அல்லாஹ் அந்த முஸ்லிம்களுக்கு அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக. ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)